நயினை

# நாகபூசணி அம்மன் நான்மணிமாலை



பண்டிதர்

ச. வே. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை

# நாகபூசணி அம்மன் நான்மணி மாலை

பாடியவர்

## பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

**வெளியீடு:**

கஜராம் - மகிழினி,

காவிரி, பாவிழி.

மேலைவீதி,

செகராசப்பிள்ளையார் கோவில்,

இணுவில் மேற்கு, இலங்கை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர்:<br>Titile: | நயினை நாகபூசணி அம்மன் நான்மணிமாலை<br>Nainai Nagabooshani Amman Naanmanimalai |
| ஆசிரியர்:<br>Author: | பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்<br>Padit S. V. Panchardcharam |
| தொலைபேசி | 416 701 9265 |
| மொழி: | தமிழ் (Tamil) |
| பதிப்பு ஆண்டு: | 2017 – 1 ஆம் பதிப்பு |
| உரிமை: | செல்வி பாவிழி – கஜராம் |
| வெளியீடு: | கஜராம் – மகிழினி, காவிரி, பாவிழி |
| அச்சிட்டோர்: | கிராபிக்லேண்ட் அச்சகம்<br>285 புறோகிரஸ் அவென்யூ, ஸ்காபுரோ, கனடா. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஓம் சக்தி ஓம்
**கனடிய நயினாதீவு நாகம்மாள் கோவில்**
**Nainativu Nagammal Kovil of Canada**
1537 - 1539 Warden Avenue, Scarborough, ON M1R 4Z8 Canda
Tel: 416 293 4000 Fax: 416 293 9536
www.nainainagammal.com

# வாழ்த்துரை.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், வரலாற்றுப் பெருமையும் சமயச் சிறப்பும், ஒருங்கே அமையப் பெற்ற பழந் தமிழ் ஆலயம் ஆகும். இந்த ஆலயத்தின் மீது அன்று தொட்டு இன்று வரை "ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்" பலர் அம்பிகையின் அருட் கடாட்சத்தைப் பக்திப் பாமாலைகளாகவும், சரித்திர நூல்களாகவும், தனிப் பாடல்களாகவும் பாடியுள்ளனர். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இரட்டைக் காப்பியங்களில் காணப்படும் இலக்கியச் சான்றாதாரங்கள். நயினாதீவின் பழங்குடிப் பெருமையையும். நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மகிமையையும் எடுத்துரைக்கின்றன. அம்மனைப் பாடிப் பரவிய கற்றறிந்தோர் வரிசையில், இன்று தமிழ் கூறும் ஈழத் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் தனது தாய் மொழிப் புலமையினால் நன்கு அறியப் பட்ட பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள், நயினை அம்மன் மீது, "நயினை நாகபூசணி அம்மன் நான்மணி மாலை" என்ற பிரபந்தம் ஒன்றைப் பாடியுள்ளமை பாராட்டத் தக்க ஒரு விடயம் ஆகும். நயினை அம்மன் மீது கொண்ட பக்தியினால் உந்தப் பட்டுப் பக்திப் பரவசத்தோடு அவர் பாடியுள்ள நான்மணிமாலை மிகவும் சிறப்புப் பொருந்திய ஒரு நூலாக உருவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அன்னையின் அருளும், தமிழ்மொழிப் புலமையும் இணைந்து நிற்க, அழகு தமிழில் நாகபூசணி அம்மன் நான்மணிமாலை என்ற சிற்றிலக்கியம் உருவாகியுள்ளது சிறப்பானதாகும். பண்டிதர். ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் தொடர்ந்தும் பல நல்ல நூல்களை எழுதுவதற்கு, அம்பாள் அருள் பாலிக்க வேண்டும் என்று கனடிய நயினாதீவு நாகம்மாள் ஆலயப் பணிப்பாளர் சபையினராகிய நாம் அம்மனை வேண்டி நிற்கின்றோம்.

நயினை மண்ணிலே பிறந்து, அம்மன் மீது பல அருட் கவிகளைப் பாடிய பெரியார்களின் தகைமைக்கு நிகரான தகைமையுடைய பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள், ஈழத்தில் உள்ள பாடல் பெற்ற தலங்கள் மீது பல இலக்கிய வடிவங்களைக் கையாண்டு பாடல்களைப் பாடியுள்ளார். இவர், தமிழ் மொழிப் பற்றும், தேசிய உணர்வும் மானிட நேயமும் கொண்ட பண்பாளர் ஆவார். தாய் மொழி, இலக்கியம், இலக்கணம் சமயம், தேசியம் என்று அவரது படைப்புப் பணி பல்முனைப்பட்டதாகும். இவர், தமிழ் ஆசானாகக் கடமையாற்றி பல நல் மாணாக்கரை உருவாக்கிய பெருமையுடையவர். இவர் கனடிய மண்ணிலும் ஆசிரியர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குபவர். இவர், நயினை நாகபூசணி அம்மன் நான்மணிமாலை என்ற பெயரில் வெளியிடும் நூல் பாராட்டுதற்குரியதாகும்.

“நயினை நாகபூசணி அம்மன் நான்மணிமாலை“ என்ற நூல் வெளிவருவதில் கனடிய நயினாதீவு நாகம்மாள் ஆலயப் பணிப்பாளர் சபையினராகிய நாங்கள் களிபேருவகை அடைகின்றோம். பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களையும் அவரது படைப்புப் பணியையும் வாழ்த்தி, வணங்கி, வரவேற்று நிற்கின்றோம்.

நன்றி.

வணக்கம்.

ந. நீலவண்ணன் (செயலாளர்)
கனடிய நயினாதீவு நாகம்மாள் கோவில்
பணிப்பாளர் சபை. கனடா.
27. 02. 2017.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"ஆதிக்கும் ஆதியாய் நாக தீவினில்
சோதிச் சுயம்புவாய் ஐந்தலை நாகம்
தன்னுடன் உதித்த அன்னை பூசணி
கிழக்கு நோக்கிய எழிற்றிரு வுருவாய்
ஆண்டமர் கின்றாள் மாண்கரு வறையில்" (பாடல்:3: வரி.2-6)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் மணிமேகலை காவியம் தோன்றிய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட பழைமை வாய்ந்த புனிதத் தலமாகும். மணிமேகலாத் தெய்வத்துடனும் புத்தபீடிகையுடனும் புனித கோமுகித் தடாகத்துடனும் தொடர்புடையதாக "மணிபல்லவம்" என வழங்கப்பட்ட இத்தலம் காலம் காலமாக ஈழத்தவராலும் தமிழகத்து மக்களாலும் வழிபடப்பட்டு வருவதாகும். காலந்தோறும் புலவர் பலரும் இத்தலத்துறை நாகபூசணி அம்மன்மீது பக்திப் பாசுரங்கள் பாடியுள்ளனர். இப்போது புலவர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களும் இத்தலத்தில் எழுந்தருளி, அருள் பாலிக்கும் நாகபூசணி அம்மன்மீது "நான்மணிமாலை" என்ற பிரந்தம் ஒன்றை யாத்துள்ளார். இத்திருத் தலத்தின்மீது பாடப்பட்ட பல்வேறு பாமாலைகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுத் தனி நூலாக அடியார்களுக்குக் கிடைக்கச் செய்தல் ஆலயத் திருப்பணிச் சபையினதும், திருநிறை சைவப் பெரியார்களதும் திருப்பணிகளில் ஒன்றாகும்.

"நயினை நாகபூசணி நான்மணிமாலை" பற்றி அறிந்து கொள்வதற்குத் துணையாக இப்பிரபந்தம் பாடிய புலவரின் அறிமுகம் அவசியமாகின்றது. பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் ஓர் அருட்கவி ஆவார். அவர் ஈழம், தமிழகம், இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளிலுள்ள பல்வேறு ஆலயங்களின்மீது நூற்றுக்கும் மேற்பட்ட திருப்பாமாலைகள் பாடியுள்ளார். புராணம், திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ், தூது, துதி, அந்தாதி, பதிகம், சிந்து, வெண்பா, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை என ஐம்பதுக்கும் மேற்பட்ட பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கையாண்டு பாடிய சமய இலக்கியங்கள் சைவத்தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பனவாகும். ஈழத்துச் சைவப் பழம்பதிகளில் இணுவில் பதியும் ஒன்றாகும். இளமைக்காலம் முதலாக இணுவில் முருகன் பதியில் ஈடுபாடுகொண்டு பாவியற்றும் ஆளுமையை வளர்த்துக்கொண்ட புலவர் பஞ்சாட்சரம் அவர்களின் பழுத்த பக்தி அனுபவம் இந்நூலிலும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இவற்றுடன், தமிழ் இலக்கியத்திற்குக் கவிதை, குறும்பாக்கள், காவியம், சிறுகதை, சமூக நாவல்கள், குட்டிக்கதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர் நாடகங்கள், பா நாடகங்கள், உருவகக் கதைகள் என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுள்ளார். இவரது இலக்கிய ஆளுமையின் பயனாகச் சாகித்திய மண்டலப்பரிசு, இலங்கை கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பேரவையின் பரிசு என்பன இவருக்குக் கிடைத்துள்ளமையும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

தமிழ்ப் பாட்டியல் நூல்கள் 96 வகைப் பிரபந்தங்கள் பற்றிய விளக்கங்களைக் கூறுகின்றன. அவற்றுள் "நான்மணிமாலை" என்பதும் ஓர் இலக்கிய வடிவமாகும். நான்கு வகையான யாப்புக்களால் ஆக்கப்படுவது நான்மணிமாலையாகும். இங்கு ப∴றொடைவெண்பா, விருத்தப்பா, அகவற்பா, கலிப்பா என்ற நான்கு யாப்புக்களைக் கையாண்டு 40 பாடல்களிலே "நயினை நாகபூசணி அம்மன்" ஆலய வரலாறு, அம்மனின் அருட்கடாட்சம், ஆலயத்தில் நடைபெறும் திருவிழா முதலியனவும் பக்திச் சுவை ததும்பப் பாடப்பட்டுள்ளன. இந்நூலின் ஏழாம் பாடலில் இத்தலத்தில் இடம்பெறும் ஆனிமாதத் திருவிழா பற்றிய வருணனை வருமாறு அமைதல் நோக்கத்தக்கது:

"ஆனிகள் தோறும் அக்கொடி யேற்றம்
வானகத் தேவரும் வந்து வணங்க
அருள்மய மாக ஆலயம் குலவும்!
திருவி ழாக்களில் சிந்தைமெய் சிலிர்க்கும்!
அயல்தீ வெல்லாம் அருளொளி பரவும்
கயிலாய வாகனக் கவின்விழா வோடு
நெஞ்சங் குளிரும் மஞ்சள் திருவிழா
ஓட்டம் நடையாய் வேட்டைத் திருவிழா
குதிரை வாகனக் கோலத் திருவிழா"

என அப்பாடலிலே திருவிழாக் கோலமும் அடியார்களின் பக்திப்பரவச நிலைகளும் நன்கு விபரிக்கப்படுதல் படித்து இன்புறத் தக்கன.

இத்தலம் பண்டைக் காலத்திற் கோபுரத்துடன் கூடியதாகவும், பல்வகை வாகனங்களைக் (தேர்கள்) கொண்டதாகவும் திகழ்ந்துள்ளது. இந்துமாக் கடலிற் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட ஆழிப்பேரலைகள் இத்தீவின் பரப்பளவைச் சுருக்கிச் சிறுதீவாக்கியமை பூகம்பவியல் கூறும் செய்தியாகும். பண்டை நாளிற் கடல்கொண்ட முத்துத்தேர், பவளத்தேர், சப்பறத்தேர் பற்றிய செய்திகளும் இந்நூற் பாடல்களிற் பேசப்படுகின்றன.

மிகப் பூர்வீக காலந்தொடக்கம் நாக நன்னாடு எனப் போற்றப்பட்ட எம் ஈழத் தாயகத்தை நாகநாட்டரசர் நல்லாட்சி புரிந்துள்ளனர். அக்காலத்தே பாண்டவர் ஆட்சியும் பாரத கண்டமதிலே நிலவிற்றென்பர். அப்போது அருச்சுனன் நாகநாட்டு இளவரசியை மணந்ததும், நாக இளவரசிக்கும் அர்ச்சுனனுக்கும் பப்பிரவாகன் பிறந்ததும் இத்தலத்துடன் பேசப்படும் பூர்வீகம் ஆகும். மேலும், 4000 ஆண்டுகள் அளவில் நாகநாட்டை ஆண்ட அரசர்களுக்கிடையே ஏற்பட்ட பகைமையைப் போக்கப் புத்தபெருமான் நாகநாட்டுக்கு வருகைதந்தார் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்சம் கூறும் செய்தியையும் பஞ்சாட்சரம் அவர்கள் தம் பாடலிற் குறிப்பிட்டிருத்தல் நோக்கத்தக்கது. பண்டிதர் பஞ்சாட்சரம் தம் செய்யுட்களில் விபரிக்கும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலே கூறப்படும் நயினையம்பதி பற்றிய மாண்புறு வரலாற்றுச் செய்திகள் படித்தறியத் தக்கவையாகும்.

திருத்தலங்கள்மீது அதன் புனிதத்தை மக்கள் மத்தியில் நிலைநிறுத்தும் வகையிலே பல்வேறு மரபுக்கதைகள் கூறப்படுவது வழக்கமாகும். அவ்வகையில் நாகபூசணி அம்மன் தோற்றக் காரணிக்கு நாட்டார்கதை மரபில் விளக்கம் கூறப்படுவதாயிற்று. மதுரையை எரித்த கண்ணகித்தாய் நாகபூசணி அம்மனாக உருப்பெற்ற கதையைப் புலவர் பஞ்சாட்சரம் நயம்படத் தம்பாடலில் விளக்கமாகத் தந்துள்ளார். மணிமேகலைக் காப்பியத்தில், மணிமேகலாத்தெய்வம் மணிமேகலையை ஆகாயவழியாகத் தாங்கிவந்து நாகதீபமாம் மணிபல்லவத்தில் இறக்கி, மணிமேகலையின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறியது. அத்துடன் கோமுகி என்னும் புனித தடாகத்திலிருந்து அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தை வழங்கி, மீண்டும் காவிரிப்பூம்பட்டினத்தில் விட்டுச் சென்றமை காவியக் கதையாகும். அதனையும் விரிவாக எடுத்தியம்பி இந்நான்மணிமாலையை நயம்படப் பாடியுள்ளார்.

இலக்கியம் என்பது நாட்டு மக்கள் வாழ்வியல், நாட்டு வரலாறு, பண்பாடு, கலைகள், சமயம், பொருண்மியம் எனப் பல்வேறு விடயங்களையும் அறியத்தரும் ஆவணமாக அமைதல் இயல்பாகும். அவ்வகையிற் புலவர் பஞ்சாட்சரம் அவர்களின் "நாகபூசணி நான்மணிமாலை"யும் அமைந்திருத்தல் இதன் சிறப்புக்களில் ஒன்றாகும். ஈழத்தமிழர் வரலாற்றில் வெடியரசன் வரலாறு ஒரு பொருட்டாகப் பேசப்படுவதில்லை. ஆனால் மகாவம்சம் கூறும் கட்டுக்கதைகளை வரலாற்றாசிரியர்கள் தேவவாக்காகக் கொள்வது விந்தையானது. 1985இல் வெடியரசன் வரலாற்றுக் காவியம் எனது முன்னுரையுடன் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தமை ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது. நயினைநாகபூசணி அம்மன் தலத்துடன் வெடியரசன், அவன் தம்பி வீரநாராயணன் ஆகிய இருவரும் மாநாய்கன் - மாசாத்துவான் ஆகியோருடன் மேற்கொண்ட போர், அதற்குரிய காரணங்கள் பற்றியும் விரிவாக இந்நூலிலே பாடியிருப்பது வரலாற்றுச் சிந்தனை கொண்டதாகும். அத்துடன் நயினைக்கடலில் தோன்றும் "கருடன் கல்லு", "பாம்பு சுற்றிய கல்லு" என்பனவற்றுடன் தொடர்புடைய கதைகளையும் இதனைப் படிப்போர் நினைவிற்கொள்ளும் வகையில் அவை பற்றியும் இந்நூலில் தந்திருப்பது வரலாற்றுச் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது.

சிறு கோவிலாக விளங்கிய நாகபூசணி அம்மன் ஆலயத்தைக கண்ணகியின் தந்தை மாநாய்கரின் பரம்பரையில் வந்த வீராசாமி என்பவர் கற்றளியாக அமைத்து, நித்திய பூசை புரிந்திடப் பட்டர்மாரைத் தமிழகத்திலிருந்து அழைத்தார் என்றும், அவர்களில் இராமச்சந்திரப் பட்டரின் மகன் "நாராயணர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் முதற் பூசகரானார் என்றும், அவர் பெயர் காலப்போக்கில் "நயினார்" என மருவி, இத்தீவும் "நயினாதீவு" என்றாயிற்று எனக் கூறப்படும் மரபு வழிக் கதையும் இந்நூற்பாக்களிலே பதிவாகியுள்ளது. மேலும் நயினாதீவைப் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் வம்சத்துடன் தொடர்புபடுத்தும் வகையில், கிள்ளிவளவன் – பீலிவளை இருவருக்கும் பிறந்த தொண்டைமான் இளந்திரையன் வரலாற்றுடன் தொடர்புபடுத்தி, மிக்க பெருமிதம் அடைகின்றார் புலவர் பஞ்சாட்சரம். இந்நூலைப் படிப்போரும் பெருமிதம் கொள்ளத்தக்கவகையில் அவர் பாடிய பாடல் வருமாறு அமைகின்றது:

"பல்லவன்ம கேந்திர வர்மன் பரம்பரையைப்
புல்லும் புகழ்நயினை பொற்புகள் – எல்லாம்
உணர்ந்தோர் கதையுண் டதையிங் குரைப்பாம்!
கணிப்பீர் நயினைக் கவின்கள் – தணிப்பீரே
தாழ்ந்தோர்நா மென்னும் தளர்ச்சி! நிமிர்கின்ற
நாள்வருங்கால் நீங்கும் கானல்!" (பாடல்:21:5–10)

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் நாகபூசணி அம்மன் ஆலயம் இடிக்கப்பட்டதோடு, அக்கோயிற் கற்களை எடுத்துச் சென்று சங்குமாவடியில் அவர்கள் கோட்டை கட்டியமை, கோயிற் சிலைகள் கடலில் வீசப்பட்டமை, ஊர் மக்கள் ஆலயத்தின் சிலைகளைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் என்பன பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இந்நூலிற் பாடப்பட்டுள்ளன. 1935இல் கட்டப்பட்ட எழிற்கோபுர வரலாறும் இதில் கூறப்படுகிறது. மேலும் நயினையம்பதியைச் சூழ்ந்து விளங்கும் அவ்வூரிலுள்ள பல்வேறு சிறுசிறு ஆலயங்கள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன.

"நாகம்மாள் அருள்மழை நனைந்தே பலரும்
பாகெனத் தித்திக்கும் பனுவல்கள் தந்தனர்"

எனத் தொடங்கி இதுவரை காலமும் நாகபூசணி அம்மன்மீது பக்திப் பாமாலைகள் இயற்றியோர் பெயர்களும், அவர்கள் இயற்றிய பாசுரங்களின் பெயர்களும் நூலின் 35 ஆம் 36 ஆம் பாடல்களிலே தரப்பட்டுள்ளன. இத்தலம் பற்றிய ஆய்வினை மேற்கொள்வோருக்குரிய தகவல்களாக அவை அமைதல் குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலக்கட்டத்தில் நம் பழைய ஆலயங்களின் வரலாற்று மகிமையை எம் மக்கள் அறிய வேண்டும். அவை பற்றி இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் எடுத்துக்கூற வேண்டியது மூத்தோர் கடமையாகும். குறிப்பாகப் புகலிட நாடுகளிலிருந்து தம் பிள்ளைகளுடன் தாயகம் செல்வோர் அதனை வெறும் கோடைகால விடுமுறைக் கொண்டாட்டமாகக் களிக்காது, இத்தகைய தலங்களுக்குச் செல்லும்போது, அத்தலங்களுடன் தொடர்புடைய வரலாற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளையும், தலங்களின் மகிமையையும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டியது காலத்தின் தேவையாக அமைகிறது. இவ்வகையிற் பக்தர்களுக்கும் பயணிகளுக்கும் பயன்படத்தக்க கைநூலாக "நயினை நாகபூசணி நான்மணிமாலை" அமையும் என்பது எனது நம்பிக்கை. இத்தகு சிறந்த பாமாலைகளைத் தொடர்ந்து இயற்றித் தமிழுக்கும் சைவத்திற்கும் பணியாற்ற எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்மன் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகம்
ரொறன்ரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

"அவனருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழ (மகிழ்ந்து) என்றார் மணிவாசகப்பெருமான் தமது சிவபுராணத்தில். அவ்வாறே அவனருளாலே அவன்தாள் பாடிச் சிந்தை மகிழ்வது என்வாழ்க்கையா யுள்ளது. நான் தெய்வங்கள் மீது இதுவரை பாடி வெளிவந்துள்ள பிள்ளைத்தமிழ்கள், தலபுராணங்கள், ஊஞ்சல்கள் முதலான பக்திப் பிரபந்தங்கள் 57இல் பெரும்பாலன வெளிப்படை, மறைமுக இறைகட்டளைகளுக்கு அமையவே பாடப்பட்டன.

அந்தவகையில் இந்த நயினை நாகபூசணி அம்மன் நான்மணி மாலையும், அம்மன் நான் கேட்டுவந்த வரமெல்லாம் தந்துவந்த கருணையினாலும், என் கனவுகளில் "நயினை நாகபூசணி அம்மன் நான் மணிமாலை" எனும் நூற்பெயரை எதிரொலிக்கவைத்ததன் மூலம் எனக்கு அவளிட்ட அருட்கட்டளைப் படியும், தன் சந்நிதிபற்றிய ஏராளம் தகவல்களை, நான் பாட உதவியாக, இலகுவில் கிடைக்கச்செய்த அன்னையின் ஊக்குவிப்பாலும் இந்த நூல் பாடி முடிக்கப்பட்டுள்ளது.

அன்னையின் அருள் தரிசனம் வேண்டி நயினைச் சந்நிதிக்கு யாத்திரை செல்லும்பேறு 2005ஆம் ஆண்டு அடியேனுக்குக் கிடைத்தது. கோவிலின் பெருங்கோபுர வாசல், முற்றத்துப் பெருமரம் என்பவற்றைப் படகிலிருந்தபடியே தரிசித்து மகிழ்ந்த என்னை, ஆலய மணல்சார் வெளிவீதியும், காகமும் நுழையமுடியாத தூய்மைப் பாதுகாப்புக் கொண்ட உட்சந்நிதானமும், மூலமூர்த்தியும், உள்மண்டபங்களின் ஒளிச்சிலைகளும், 'அமுதசுரபி' அன்னதான மடத்தில் அன்றாடம் வழங்கப்படும் அமுதென இனிக்கும் அன்னப்பிரசாதமும் என்னுயிரின் மையப்பகுதிவரை ஊடுருவி நின்று இந்தக்கணம் வரை இனிக்கின்றன.

நான் கனடாவுக்குக் குடிபெயர்ந்தபின் 2008ஆம் ஆண்டு இலண்டன் என்வீல்ட் நாகபூசணி அம்மன் கோவில் நிர்வாகம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, நான் நாகபூசணி அம்மன் மீது யாத்து அனுப்பிய 4 இசைப்பாடல்கள் தமிழகப் பிரபலபின்னணிப் பாடகர்களான, மாணிக்க விநாயகம், ஹரிஷ் ராகவேந்திரா, பிரசன்னா, மாலதி ஆகியோரால் பாடப்பட்டு ஒலிப்பேழைவடிவில் வெளிவந்து, பலரின் பாராட்டைப் பெற்றிருப்பது நாகம்மாளின் கருணைக்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்பார்வை என் பக்திப்பணி மீதிருப்பதை உறுதிப்படுத்தி உற்சாகமளித்தது. இவ்வாறே ஜேர்மனி பொற்ஷைம் நகரின் நாகபூசணி அம்மன் கோவிலின் 2013ஆம் ஆண்டுத் திருவிழா நாட்களில் என்னை அழைத்து தொடர்சொற்பொழிவு நிகழ்த்த வைத்து, கோவில்நிர்வாகம் செய்த வழிமையான மதிப்பளிப்போடு சிறியேனின் கருத்துரைகள் சிறப்பாகப் புலத்துத் தமிழர்களின் அன்றாடக் கடவுள்நெறிவாழ்வுக்கு அனுபவபூர்வமாக உச்சமாக வழிகாட்டும் மிக்க பயன்பாடு கொண்டதா யிருந்ததாகப் பாராட்டிப் பேசி மகிழ்ந்து, ஆலய அந்தணர் குழுவினரும் அந்த ஆலய மரபையும்மீறி எனக்குக் கௌரவிப்புச் செய்யவைத்த நாகபூசணித்தாயின் நல்லருள் ஞாபகம் அடிக்கடி வந்து வலிமை தந்தது.

இதுபோல 1995இல் தென்மராட்சி நுணாவிற்குளம் கண்ணகி அம்மன் நான்மணிமாலையும், 1996இல் கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் நான்மணி மாலையும் பாடி, "அன்னை அருளமுதம்" எனும் பெயரில் கிளி. கந்தபுரத்தில் 1997இல் நூலாக வெளியிட்ட அனுபவமும் நம்பிக்கையூட்டியது. நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாக பிள்ளை எழுதிய நயினை வரலாற்றுநூலும், திருமதி வசந்தா நடராசனின் "உதயன்" கட்டுரையும் வேண்டிய வரலாற்றுச் செய்திகளை வழங்கின. நயினைத்தாயின் அருளுந்தலில் சிறந்த ஒரு வரலாற்றுக் காவியமாகவும் "நயினை நாகபூசணி அம்மன் நான்மணிமாலை" பாடி முடிக்கப்பட்டது.

இந்த நூலைப்படித்து முன்னுரை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கனடா நாகம்மாள் கோவில் பணிப்பாளர்சபையினருக்கும், குறிப்பாகச் செயலாளர் திரு. ந. நீலவண்ணன் அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டு வழங்கிய கனடா கிராபிக்லேண்ட் அச்சக உரிமையாளர் திரு. கிருஷ்ணா அவர்களுக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியைக்கூறி, எம் சந்ததிக் கொழுந்துகளை முழுமையாகப் பாதுகாத்தருளும் கருணை வரத்தினை அருளும் படி நாகபூசணிப் பேரன்னையை வேண்டி அமைகிறேன்.

வணக்கம்

அன்னை அடியவன், அன்பன்

**ச. வே. பஞ்சாட்சரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## முன்னறி தெய்வங்கள் வேலுப்பிள்ளை,
## சின்னப் பிள்ளை திருமுன்னிலைக்கு!

கொள்ளை செல்வங் குலவுங் குடிப்பிறந்தும்
பள்ளிக்குக் கள்ளம்படுத்திப் படிக்காமல்
விட்டுப்பின் ஒப்பமென விரல்நாட்டும் நாணமெண்ணி,
திட்டமிட் டேஉனது சேய்நாம் எழுவரையும்
கொல்லும் வறுமையிலும் குன்றாத உறுதி கொண்டு
வல்ல கணவருடன் வலிந்து படிப்பித்து
நாடறிய உலகறிய நலஞ்செய்த என்தாயே!
மேடைகளில் ஏறவைத்து, வீதிவலம் பலதந்தாய்!
தாங்கரிய கொடுமைகளைச் சந்நதமாய் எதிர்த்தாலும்
தீங்கெவர்க்கும்எண்ணாத தெய்வமனம் தந்தாயே!
அக்கிரமங் கண்டாலோ ஆவேசங் கொண்டெழும்உன்
அக்குணத்தால் உன்பிள்ளை ஐயோநான் இனக்கொலைசெய்
உயிர்கொல்லி நோயொன்றை உக்கிரமாய்ச் சாடியதால்
உயிரச்சம் தரப்பட்டே உறைகின்றேன் கனடாவில்!
வருவான் மகனென்று நூற்றாறு வயதுமட்டும்
மரணப் படுக்கையிலே மனமேங்கி ஏமாந்தாய்!
மணமாகா முன்னும்தான், மணமான பின்னும் தான்
மணியான கவிஞர்குழு வண்டிகளில் ஏறிப்போய்
எங்கோஊர் மேடையில் நள்ளிரவில்நான் பாவரங்கில்!
இங்கேவீட் டில்தாயே எனைக்காத்து விழித்திருப்பாய்!
அன்றெல்லாம் எனைக்கண்டே ஆச்சிவிழி மூடிட்டாய்!
இன்றெனிலோ ஏங்கிநொந்து காணாதே ஏகிட்டாய்!
கும்பிட்டீர் பெற்றவரே குழந்தைகள்நம் காப்பிற்கே!
நும்பற்றிச் சாகின்ற நொடியும்நீர் வேண்டவில்லை!
தோட்குழந்தையாய்க் கோவில் தோறும் சுமந்திறைவன்
மாட்சி உணர் வித் தருட்பா மழைதூர்க்க வைத்தீரே!
வேண்டியே பிள்ளைவரம் விரதம்ஏ ழாண்டேற்றீர்!
ஆண்டவன் வரம்தந்த சேய்களெமை ஆச்சி, அப்பு
போற்றி வளர்த்தீர்! புரியும்என் கடும்தவத்தால்
ஏற்றேனும் மீருயிரை இறைமுத்தி தரவைப்பேன்
புத்தென்னும் நரகத்தில் புகாமல் உமைக்காத்த
புத்திரனாய்ச் சேர்ப்பேன் புகழ்!

**ச. வே. பஞ்சாட்சரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை
# நாகபூசணி அம்மன்
# நான்மணிமாலை

## காப்பு

ஏழுபசுந்தீவுள் எழிலார் நயினையிலே
ஆழியலை ஏத்த அமர்ந்தருளி – ஆளுகின்ற
நாகம்மாள் மேல்நால் மணிமாலை பாட, எலி
வாகனனே, நல்காய் வரம்!

## நூல்

(பஃறொடை வெண்பா)

வன்னி தலவிருட்சம்! வாழ்மூர்த்தி நாகம்மாள்! 1
மன்னும் தலம்நயினை மாண்கோவில்! நன்னீராம்
தீர்த்தம், நயினைதன் மேற்குத் திசையினிலே
ஆர்க்கும் கடலோரம் அந்நயினை – யூர்ச்சாமி
வைத்த வைரக்கற் கேணியதாம்! ஆண்டுதொறும்
அத்தீர்த்தம் அம்மனாடு வார்!அன்றி – செத்தவர்தம்
இன்னுயிர்ச்சாந்திக் கியற்றுகிறார் இக்கேணி
தன்னருகே தர்ப்பணம் தாம்! மேலும் – அன்னையமர்

இப்பெரிய கோவில் இருக்கும் பெரும்வளவு
அப்பாண் டவஅர்ச் சுனன்,ஈழச் – செப்பும்
தமிழ்நாகக் கோமங்கை தம்மன்புச்சேயாய்
அமைந்தவனாம் பப்பிர வாகன் – கமழ் கீர்த்தி
சார்பெயரைத் தாங்கியின்றும் நிற்பதென அப்பண்டை
ஊர்சொல்லும் ஓர்வரலா றுள்ளததை – ஆர்வமுடன்
ஆராய்ந்து காண்முடிவு அந்த இளவரசி
ஊர்நயினை, ஒண்வேப்பங் காடு!

(விருத்தப்பா)

காடு,மலை, ஆறு,கடல், கவின்நீ ழல்கள் 2
கதிக்கவருள் தாமாக உதிக்கும் அந்தப்
பீடிறைகள் தான்தோன்றி உருக்கள் என்பர்!
பிள்நாக்கு நாகம்மலி நாக தீவுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுதனில் உதித்தநாக பூச ணித்தாய்,
காடதுநா டாகுங்கால் காணப் பட்டுத்
தேடிவந்து பலவூரில் மக்கள் தாமும்
சிந்தைகனிந் தேத்துகின்ற தெய்வம் இன்று!

(அகவற்பா)
இன்றுங் கூட, அன்று போல 3
ஆதிக்கும் ஆதியில் நாக தீவினில்
சோதிச் சுயம்புவாய் ஐந்தலை நாகம்
தன்னுடன் உதித்த அன்னை பூசணி
கிழக்கு நோக்கிய எழிற்றிரு வுருவாய்
ஆண்டடமர் கின்றாள் மாண்கரு வறையில்!
தெற்கு முகமாய்ச் சீர்மகா மண்டபத்
தற்புதக் காட்சி அளிக்கிறாள், மனோன்மணி
வடிவில்! முன்னிரு இட, வலக் கரங்கள்
உபய கரமும், அபய கரமும்!
பின்வலக் கையில் பிறங்கும் தாமரை!
பின்இடம் ஏந்தும் அக்கின் கோவையே!

(கலிப்பா)
கோவையாய் கிடைக்கும் கூற்றுகள், ஆதாரங்கள் 4
யாவும் உரைப்பனவே அன்னை பழம்பெருமை!
நரசிம்மன் என்னும் தென் நாட்டுச் சிற் பக்கலைஞர்
வரலாற்றுக் கால வகுப்புக்கும் முன்பிருந்தே
வருவது வழங்கிநாக வழிபாடித் தலத்தென்றார்!
கருவறையி லின்று காணப் படும்சிற்பம்
உரு தேய்ந்து, கால ஓட்டத்தில் நாகலிங்க
உருவம் அமைந்த ஒன்றென் றியம்பிட்டார்1
செல்லக்கண் ணுஎன்னும் சிற்பத் துறையறிஞர்
சொல்லியதும் "கருவறையில் சுடரன்னை கொள்ளுருவம்
ஆயிரம் ஆண்டுக்கும் முந்தியது! அதன்பின்ன
தாயுள்ள ஐந்துதலைச் சர்ப்பம் நிச்சயமாய்
அதிலும்பல் காலம்முன் அமைந்திருக்க வேண்டும்" என்றே!
அதிசயமே அன்னையின்தொன் மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மைமிகு நாகச் சுடரன்னை பேரருளின் 5
தன்மையை ஞானத் தனிநோக்கின் – உன்னதத்தில்
எண்ணியல் வித்தகர் இன்றமிழ் இந்தியராம்
பண்டிதர் சேது இராமன்தான் – கண்டுரைத்தார்
குண்டலினி சத்தியே கொண்டுநாக ரூபத்தை
அண்டியது இந்நாக தீவென்று! – மண்டருளின்
நல்நாக பூசணியை நண்ணித் தொழுதிட்டால்
வல்நாச ஐந்துபுலன் மாண்பெய்தும்! – புல்லஒளி
மென்மேலும் நாகம்மை மெய்யடியைக் கும்பிட்டு
நன்முத்தி சேர்வோம் நயந்து!

நயந்துமாதந் தோறும் சக்க ரப்பூசையில் 6
நண்ணுவள்நா யகிஎழிலின் இறைவி யாக!
வியன்கல்வி, கலைச்செல்வம் வீரம் ஓங்க
வேண்டிநவ ராப்பூசை நடக்கும் இங்கும்!
உயருங்கொடி யேற்றம், பின் திருவி ழாக்கள்
ஓராறு நாள்நடந்த வாதிக் காலம்!
இயன்றனநாள் பத்தாகப்பெருகி, இன்று
எய்தும்பதி னைந்துதினம் ஆனிக் கானி!

ஆனிகள் தோறும் அக்கொடி யேற்றம் 7
வானகத் தேவரும் வந்து வணங்க
அருள்மய மாக ஆலயம் குலவும்!
திருவி ழாக்களில் சிந்தை, மெய் சிலிர்க்கும்!
அயல்தீ வெல்லாம் அருளொளி பரவும்!
கயிலாய வாகனக் கவின்விழாவோடு.
நெஞ்சங் குளிரும் மஞ்சட் திருவிழா
ஓட்டம் நடையாய் வேட்டைத் திருவிழா
குதிரை வாகனக் கோலத் திருவிழா
தேர்த்திருவிழா, பின் தீர்த்தத் திருவிழா
கதிர்மின் குமிழ்மயச் சப்பறத் திருவிழா
ஆர்ப்பரி அலைகடல் தெப்பத் திருவிழா
என்பன விழாக்களுள் ஏற்றம் மிக்கவை!
அன்பர்கள், அடியவர் ஈழ மண்ணின்
நகர்பல, ஊர்பல இருந்தும் நண்ணுவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலிர வின்றிப் பம்பும் நயினையே!

நயினையாம், ஏழ்தீவின் நடுநா யகநகரில் 8
அயல், எதிரில் எல்லாம் அலைகள்ஆ டிப்பாட,
கிழக்குத் திசை நோக்கிக் கீழ்க்கரையில் கடல்பார்த்தே
ஒளிப்பூவாய் வீற்றிருக்கும் உலகத்து நாயகியாம்
அன்னைபூ சணியின் ஆகாயங் கீண்டுயர்ந்த
வன்னஎழிற் கோபுரம் மங்கலமாய் ஆயிரத்துத்
தொள்ளா யிரம்முப்பத் தைந்தினிலே தோன்றிற்று!
எள்போட்டால் எள்விழா தெனும்பக்தர் நெரிசலிடை
நயினைத்தாய் பவனிவரும் நலன்பூத்த சிற்பத்தேர்
செயப்பட்ட தகையடுத்துச் செல்வதற்குள் ஈராண்டு!
பன்னீராண் டுகள் தோறும் பண்ணுகுட முழுக்கோடு,
பன்னலஞ்சேர் திருப்பணி பலபெற்றாள் இதுவரையில்!
என்றாலும் பண்டிருந்தே இவள்பெற்று வருஞ்சீர்கள்
ஒன்றிரண் டல்ல!ஒருகாலம் இவள்கொண்ட
முத்துத்தேர், பவளம், செப்புத்தேர் எனமூன்று
அத்தேர்கள் அலைகடலுள் இன்று!

இன்றைப்போ லின்றி இருந்தோம் தமிழர்நாம் 9
அன்றெல்லாம் ஒன்றாய் அரிகளென! – பின்பிடையில்
வந்தகடல் கோளெம் வதிதிடல்கள் வேறாக்க,
இந்தச் சிறுமைநிலை எய்தினோம் – முந்தையதாம்
தொல்குமரிக் கண்டத்தைச் சூழாழி பல்தடவை
வல்விழுங்கல் செய்த வரலாறு – சொல்லிடுவர்!
அந்த ஓர் நேரத்தில் ஆழி இடைப்புகுந்து
அந்தோ!தாய் மண்ணை அறுத்தீழம் – நொந்தலற,
வேறாக்கி விட்டதந்த வேளையிலும் இம்மண்ணில்
வீறார் தமிழரசர் வீற்றிருந்தார் – கூறாமல்
இல்லைஇதை நூல்களும் ஈரா யிரமாண்டு
தொல்நூல் சிலப்பதி காரமிதை – சொல்லும்,
குமரியாம் குன்றை ப.·..·.றுளி யாற்றைக்
குமுறுகடல் கோள்கொண்ட தென்று! அமைவாக
அப்பொழுதித் துண்டுகளில் ஆம்! நாமே வாழ்ந்திட்டோம்!
ஒப்பவே நாகநா டாம்பெயரை – தப்பாதிவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழந்தான் தாங்கி, இனம்நாகர் ஆயிற்று!
ஆழமாய் நம்பிடுவோம் ஆய்ந்திதனை – மூளக்
குருசேத் திரப்போர், கொடுத்தான் சே ரன் சோ
றிருபடைக்கும் நாலா யிரத்து!

நாலாயி ரமாண்டின் மூத்த தாக 10
நவில்கின்றார் பாரதத்தை! அந்த நூலின்
மேலான வீரன்காண் டீபன் வந்து
மேவினனாம் நாகஇள வரசி தன்னைக்
கோலாக லமணத்தில்! குழந்தை யாகக்
கொஞ்சினராம் பப்பிரவா கன்பேர்ச் சேயை!
காலூன்றன் னைகாணி அவன்நா மத்தால்
காணப்படல் நாகம்மை தொன்மை சொல்லும்!

சொல்லும் சான்றுடன் எண்ணிப் பார்த்தால் 11
நல்லாய் விளங்கும் நாலா யிரமாண்டுப்
பழமை மிக்கது எழில்மிகு நயினை!
ஈரா யிரத்தைந் நூறாண் டு கள்முன்
போராடி வீணில் பொடிந்த இரண்டு
நாக மன்னரை நல்வழிப் படுத்தி
நாகம் மாள்தன் நல்லருள் நயப்பிக்க
நண்ணினார் புத்தரிப் புண்ணியத் தீவெனக்
கூறும் மகாவம்சம்! கூறும்மணி மேகலை!
இக்கால நாகர் பரம்பரை இந்தப்
பக்குவ நிலைபெறப் பலநூ றாண்டுகள்
எடுத்திருக் கும்எனல் அடுக்குமே! அதனால்
நயினைக் கிருப்பது நயந்துணர் வோமே,
மேலாம் பழமை நாலா யிரமாண்டே!

நான்கா யிரமாண்டு நகர்ந்தபழங் காலத்தில் 12
தான்தமிழர் நாகராம் தனிப்பெயரில் இங்கிருந்தார்!
ஈழப் பரப்பும், ஏழ்யாழில் தீவுகளும்
வாழும் இனம்பெரிதும் நாகரந் நாள் மனங் கொள்வோம்!
நம்முள்ளே நிலவியதும் நாகதெய்வ வழிபாடே!
இம்முறையில் நாகதீவு என்னும் நயினையிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்முரமாய் நிலவியது முழுநாக வழிபாடே!
ஐம்பெருங் காப்பியத்துள் அதிகபுகழ் கொண்டதுவாய்
இளங்கோ வடிகள் இயற்றுசிலப் பதிகாரம்
வழக்குரை காதையிலும் வருகிறது நாகதீவு!
ஏறக்குறைய இருபதுநூ றாண்டின்முன்
கூறியுள்ளார் இம்மண் குறித்து!

குறிப்புகள் தாய்நயினைக் கோவிலைப் பற்றிப் 13
பொறித்தபல புத்தகங்கள் உண்டு! – குறித்தறிக!
ஈழத்தில் வாழ்ந்திருந்த எம்மவராம் நாகரினம்
நாளும்மேற் கொள்நாகம் ஏத்துநெறி – நாளடைவில்
தாய்த்தெய்வ ஏத்துகையாய்த் தானாக மாறியதால்
வாய்த்ததிந்த நாகம்மாள் மாதாவை – ஏத்துநெறி!
இன்னதற்குக் காரணமாய் இன்னோர் கதையுண்டு
கர்ன பரம்பரையாய்க் காதறியும்! –என்னவெனில்
கோவலன் வெட்டுண்டு, கூடாய்க் கிடக்கையிலே,
தேவிஅக் கண்ணகியின் திண்கற்பால் – மேவியுயிர்
மீண்டுமுதல் மாதவியை வேண்டி விளித்ததனால்
மூண்டுசினம் நெஞ்சம் முறிந்தவளாய் – பூண்டனளாம்
கண்ணகி ஐந்துதலை நாகம்போல் காங்கையுரு!
ஒண்மதுரை விட்டூர்ந் துறுதெற்காய் – தண்ணாழி
நீந்தி நயினைநண்ணி, நின்றாறிப் பின்னரும்
மீந்தூர்வு கட்டுடைச் சீரணி – சார்ந்துபின்
மேலும்போய், அவ்வங் கணக்கடவை, அங்கிருந்து
சாலும் சுருவில்,வற் றாப்பளை – போலும்
பதிகள் நகர்ந்து, மறைந்த துயரக்
கதையும்உளதவள் கண்ட – பதிகளெலாம்
ஐந்தலைநா காலயங்கள் அண்டையிலே கொண்டிருக்கும்
விந்தையொன் றுண்மை விடையாகத் – தந்ததுதான்
நாக வழிபாடும் நம்தாய் வழிபாடே
ஆகும் எனும்உண்மை யாம்இந்தச் – சோகமுறுங்
கண்ணகியின் கற்பில் கனிவலுவைப் பேரருளால்
கண்ணும் மணிமே கலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேக லையாத்த புலவர் புத்த 14
மதக்கவிஞர் சீத்தலைச் சாத்த னாரும்
மணிபல்ல வம்என்னும் நயினை கொள்ளும்
மாணிக்கப் பீடம்அறு பத்து நான்கு
அணிசக்தி பீடங்கள் தம்முள் ஒன்று
ஆகும்எனக் குறிப்பிட்டி ருப்ப தும்தான்
துணைச்சான்று நாகம்மாள் வழிபா டார்ந்த
தொன்மையினை உலகேற்றுக் கொள்வதற்கு!

கொள்ளும் இந்தச் சான்றி னோடே 15
உள்ளன இன்னும் உறுதிசெய்சான்றுகள்
பத்தினி கண்ணகி படமைந்து நாகமாய்
இத்திரு நயினையை எய்திய கதையும்
மணிபல் லவத்தை அணிசெய் பீடம்
பெண்தெய்வம் புவனேஸ் வரிபீடம் என்று
திண்ணமாய்ச் சித்தார்த்தன் புத்தன் சொன்னதும்
பிரபஞ்ச உற்பத்தி, சியாமள தாண்டகம்
அருமிந்த நூல்கள் அன்னைபுவ னேஸ்வரி
தனதாம் சக்தி பீடம் நயினை
எனக்கூ றுவதும் நினைக்கில்பல் லாயிரம்
ஆண்டுகள் முன்பே அன்னைவழி பாடு
பூண்டிக் கோவில் பொலிந்த துணர்வமே!

உணருதல் வேண்டுமோர் உண்மையும், வேறுமத 16
மணிமேகலா தெய்வ மங்களம் பற்றியுமே!
காவிரிப்பூம் பட்டினக் கன்னிமணி மேகலையைப்
பூவெனவே காவிவந்து புனித மணிபல்லவத்தில்
பழம்பிறப் பவட்குணர்த்தி, பாங்குறு கோமுகியாம்
குளம்நல் கூண்சுரபி கொள்வித்த அருட்பெண்ணாள்
மணிமேக லாதெய்வ வடிவுங்கூட நயினை
அணியம்மை நாகம்மா ளாம்!

நாகம்மாள் ஆட்சிபுரி நல்லருளால், மேலுந்தான் 17
நாகர்வாழ் தீவாயும் நண்ணியதால் – வாகுறவே
நாகதீ வென்றந்நாள் நண்ணிநின்ற ஊர்ப்பெயரே
ஆகியது பின்நயினா தீவென்று – சோகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகா ரக்கதையிற் சீர்க்கண் ணகியின்
குலத்தந்தை யாம்மாநாய்க் கன்தான் – குலவுபெயர்
தான்மருவித் தந்தபெயர் இந்நயினை என்ப! இது
ஏன்எப் படியென்னில் இக்கோவில் – மேன்மைகட்
கானபுரிந்தோர் வணிகமா நாய்க்கன்பின்
னானதளிர் கள்வணிக ராம்!

வணிகர்கள் மாசாத்து வான்மா நாய்க்கன் 18
வாங்கநாக ரத்தினங்கள் வணிகர் சூழ
மணிநயினா தீவுக்கு வந்து சேர்ந்தார்!
மன்னன்வெடி அரசனென்பான் நெடுந்தீ வின்கண்
அணியரண்கொள் கோட்டைகட்டி ஆண்டிருந்தான்!
அத்தம்பி வீரநாரா யணனை, பெண்ணை
மணிகளுக்கு நயினையிலே காவல் வைத்தான்!
வந்ததங்கே இருகன்னைக்கிடையி லும்போர்!

போரில் மடிந்தனர் வீரநா ராயணன், 19
கோல மனைவி நீல கேசி!
உடனுறு பரவர் படையும் மாண்டது!
பொருத இடமின்றும் பரவர் கல்லெனும்
பெயரால் பேசுனும் நயினை யூரில்!
வல்போர் வென்ற மாநாய்க் கன்அணி
செல்லப் புளியந் தீவு, தண்ணீர்க்
கால்வாய் ஒன்றில் கப்பலில் சென்றது!
சால்திரைக் கடலில் தங்களின் எதிரில்
புளியந் தீவின் எழிற்சிவன் தளிநின்று
நாகம் ஒன்றுவாய் நண்ணும் பூவுடன்
வேக மாக வருதல் கண்டனர்!
வருமப் பாம்பை வவ்விக் கொல்லக்
கருடன் ஒன்றுங் கடுகுதல் கண்டனர்!
கண்ட நாகம் கலங்கிப் பதறி
அண்டை, கடலிலோர் திண்கல்லைச் சுற்றி
ஒளித்துக் கிடந்தது! வெளிப்படட் டும்என்று
கோரக் கருடனுங் குந்திய தோர்கல்!
நேரம் இப்படி நீண்டு செல்கையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெலாம் பார்த்துப் பதைபதைத் திட்ட
ஞானாம் பாள்பக்தர் மாநாய்க் கன்குழு
நாக பூசணி நற்பூ சைக்கே
நாகம் பூகவ்விச் செல்வதை விளங்கி,
நயினை நாக ஈஸ்வரித் தாயைத்
தயவாய் வேண்டினர் சர்ப்பத்தைக் காக்க!
அருளினள் அன்னை! கருடன் அகன்றது!
நாகம்மாள் திசையில் நாகம்,பூ சென்றன!
"பாம்பு சுற்றிய கல்லு" எனவும்
"கருடன் கல்லு" எனவும் பெயர்கொள்
இருகல் இன்றுங் கடலில் தெரிவதாய்ச்
சொல்லியே மக்கள் புல்லரிக் கின்றனர்!
நாகங் காத்த நாகாம் பிகையை
வாழ்த்தித் தன்தலை தாழ்த்தினன் வணிகனே!

வணிகன்மா நாய்க்கன் மரபில்வீ ராசாமி 20
மணிபல் லவமாதா மாட்டன்பு மிக்குடையார்!
சிறுகோவி லாயிருந்த தேவி திருத்தளியை
உறுதிசால் கற்றளியாய் ஊக்கமுடன் கட்டிட்டார்!
திட்டமுடைப் பூசை தினம்நிகழ வைத்திடவே
பட்டரைப்பண் டாரத்தைப் பண்பறிந் தழைத்திட்டார்!
இப்பட்டர் மார்களிலே இராமச்சந் திரப்பட்டர்
அப்புதல்வர் 'நாயனார்' அமைந்தமுதல் பூசகராம்!
அந்நாய னார்பெயரே அடியரிடை நயினாராய்ப்
பன்னாள் நிலவிவந்து, பாம்பிறைவி யூருக்கும்
நயினாதீ வாம்நாமம் நண்ணியதாம்! ஊர்,நாடு
அயலீர்க்கும் தாய்மை அலை!

அலைகடலிற் சேயாக அண்டியே, அன்று 21
நிலைகுலைந்து நின்ற தமிழ் நாட்டை –தலைநிமிர
வைத்தமன்னன் பல்லவன், வல்லவன் புலிகேசி
மெத்தும் திமிரடக்கி வெற்றிகொண்ட – அத்தீரன்
பல்லவன்ம கேந்திர வர்மன் பரம்பரையைப்
புல்லும் புகழ்நயினை பொற்புகள் – எல்லாம்
உணர்த்தோர் கதையுண் டதையிங் குரைப்பாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீர் நயினைக் கவின்கள் – தணிப்பீரே
தாழ்ந்தோர்நா மென்னும் தளர்ச்சி! நிமிர்கின்ற
நாள்வருங்கால் நீங்குங்கா னல்!

கானல்வரி பாடஇடம் தந்து காதல் 22
கானல்நீ ராகவைத்த பூம்பு காரில்
வானவரும் வந்துமகிழ் இந்தி ரற்காம்
மாண்பு விழாக் காணவந்த நாக நாட்டு
மேனகைபோல் பீலிவளைக் கோமங் கையை
விரும்புகிள்ளி எனும்அந்நாட் டரசன் துய்த்தான்!
ஆனதிடர்! அவளதனால் கர்ப்பம் உற்றாள்!
அந்தவிழா நிகழ,நாக நாடு மீண்டாள்!

மீண்ட மகளின் மெய்ந்நிலை கண்டு 23
மூண்ட கோப முனிவால் கனன்று,
நாக நாட்டு மன்னவன் அவளை
நாக தீவுக்கு நாடு கடத்தினன்
கம்பளச் செட்டியாம் நம்பகத் துணையுடன்!
பீலி வளையாம் பிள்ளையைத் துறந்தான்!
சாலவும் நொந்து தன்னூர் வந்த
அந்தப் பிள்ளையைச் சொந்தப் பிள்ளையாய்
அன்னை நாகம்மை அரவணைத்திட்டாள்!
பன்னரும் பற்றுடன் பணிந்தன்னை பணிசெய்து
அரச குமாரி ஆங்கிருந் தழகிய
ஒருமக வானை உவந்து பெற்றாள்!
கிள்ளி வளவன்–சேய்தந்தை யிடமே
பிள்ளையை அனுப்பப் பேரவாக் கொண்டனள்!
நம்பிக் கொடுத்தாள் கம்பளச் செட்டிகை!
பூம்புகார் நோக்கிப் புறப்பட்ட கப்பலில்
தாம்செட்டி சேயுடன் தலைப்பட்டார் பயணம்!
கடைக்கடல் தனில்பாறை உடைத்திடக் கப்பல்
தப்பி நீந்தித் தரை சேர்ந்த சிலர்போய்ச்
செப்பினர் செய்தியை, கிள்ளிக்கு! அதிர்ந்தான்!
ஆட்களை அனுப்பிப்பன் னாட்கள் தேடினன்!
கிடைத்திலன் பிள்ளை! துடித்தனன் நெஞ்சம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்க மறுக்க மணிமே கலை,தன்
வெறித்தன மானவேட்கை நடையால்
கொலையுண் மைந்தன் உதய குமாரனாம்
தலைமகன் பற்றிய சஞ்சலத் தோடு
இந்தச் சேயையும் இழந்த துயரில்
நொந்து, நோய்த்துத் துடித்தனன் கிள்ளியே!

கிள்ளியோ தன்முன்னைக் கீழ்விதித் தண்டனையாய்ப் 24
பிள்ளைப்பா சம்வாட்டப் பேதலிக்க இங்கிருந்து,
துண்டுப் பலகையொன்றில் தொண்டைக் கொடிசுற்றித்
தொண்டைமண்ட லக்கரையில் துவண்டும், உயிருடனே
திரையேந்திக் கொணர்ந்து சேர்த்திட்ட தச்சேயை!
பரிவோ டெடுத்தெவரோ பாலகனைக் காத்திட்டார்!
அந்தச் சேய்தான் யார்யாரோ வளர்ப்பினிலே
விந்தைப் பலங்கள் மேவி வளர்ந்தோங்கிப்
பல்லவர் குலக்கொழுந்தாய்ப் பார்போற்றும் புகழ்பெற்றான்!
வல்லியாம் தொண்டைசுற்றி வந்ததால் தொண்டைமான்,
தளர்ந்த திரைதலைச் சுமந்துகரையிலே தந்ததனால்
இளந்திரையன் எனும் பெயர்கள்இட்டழைக்கப் பட்டிட்டான்
தொண்டைமான் இளந்திரையன் சுடரும் பெயர்தன்னைக்
கொண்டர சாண்டானாம் கூர்த்தபுகழ் பூண்டானாம்!
கூர்த்தபுகழ் இம்மகனைக் கொடுத்த மணிபல்லவத்தின்
சீர்ப்பெயரே பல்லராய்த் திகழ்வதப் பரம்பரைக்கு!
பல்லவரா யன்கட்டு,பல்லவன்நெல் லாலையெனப்
பல்குவது பல்லவன்பேர்ப் பாங்கு!

பாங்கெல்லாம் பாம்பன்னை, பாம்பணியன் பாங்காக 25
ஈங்கெம் வழிபா டிருக்கையிலே –நாங்கலங்க
ஆயிரத்தைந் நூற்றைந்தில் அந்நியப்போர்த் துக்கேயர்
தீயெடுத்த கைகொண்டு தேசமிதன் – நாயகராய்
வந்து நுழைந்து மடக்கியன்றை நம்மரசைக்
குந்தி யிழைத்த கொடுமைகளால் – நொந்தோம்!
பிடித்தாண்டார் நாட்டையன்றிப் பேரச்சம் தந்தார்
இடித்தாரெம் மிந்துக்கோ வில்கள் – எடுத்தந்தக்
கற்கள், இரும்புகளால் கட்டினர்தம் ஆலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்பராய்த் தங்கள் அடக்குமுறை – முற்பாட்டால்
எங்கள் மதப்பண்பு, எங்கள் மொழிக்கல்வி
பங்கப் படவைத்துப் பாழ்செய்தார் – இங்கும்
நயினையிலே நாடுதொழும் நாகம்மை கோவில்
கயவர் இடித்தெறிந்து கற்கள் – அயலில்
அமைசங்கு மாவடிக்குக் கப்பல்களில் அள்ளிச்
சமைத்தார் ஒருகோட்டை! கல்லின் – சுமைகொண்ட
கப்பல், நகர மறுக்க கழுத்தைந்துச்
சர்ப்பச் சிலைதன்னைத் தள்ளினர்நீர் –அப்புறமே
போகவிடப் பட்டாரப் புல்லர்! கடலெறிந்த
நாகச் சிலைபின்னர் நல்லோரால் – நாகன்கா
டாமிடம்வைத் தாதரிக்கப் பட்டதுவாம்! அம்மனுக்
காமந்தத் தேரையும் அந்நியரச் – சீமைச்
சனிக்குள் சனிப்போர்த்துக் கேயர் கடலில்
வினைகெட்டுத் தள்ளி வீழ்த்திட்டார் – மனங்களால்
நொந்துமெய் யன்பரெல்லாம் நூதனிதாள் நோற்றதன்றிச்
சிந்தித் திலர்தீச் செயல்!

தீயசெயல் மயமான அந்நி யர்கள் 26
திருக்கோ விலைத்தகர்த்த வேளை அங்கு
ஆயிரமாய்க் குவிந்திருந்த அருஞ்செல் வங்கள்
அத்தனையுங் கொள்ளையிட்டுச் சென்றார்! அந்நாள்
கோயில்மணி யம்ராம லிங்கம் ராமச்
சந்திரன்என் பார்முந்திக் கொண்டே அம்மன்
தூயசிலை தமைச்சுமந்து வல்லிக் காட்டு
ஆலம்பொந் தில்ஒருவன் காப்பில் வைத்தார்!

வைத்துக் காத்து வந்தனர் சிலைகள் 27
எத்தனை யோபல ஆண்டுகள்! பின்பு
பொல்லாப் போர்த்துக் கேயரை விரட்டி
ஒல்லாந்தர் வந்தார்! ஒல்லாந் தருந்தாம்
நல்லார் அல்லர்! தொல்தாய் கோவில்
கயவர் அழித்தபின் நயினா தீவின்
இரட்டங் காலி முருகனா லயத்தில்
இருத்தப் பட்டாள் இறைவி பூசணி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசணிக் கும்இங்கே பூசை நடந்தது!
போர்த்துக் கேயர் புகுமுன் கோவிலுள்
ஊர்ச்சனம் ஆங்குறு ஒருநாக தம்பிரான்
விக்கிர கத்தைப் பக்குவ மாய்மீட்டு
நயினா தீவின் அயலுறு தீவாம்
அனலை தீவின் புளியந் தீவில்
இனிது வைத்தனர்! இன்றும் பூசிப்பரே!

பூசிக்கப் பட்டுவருங் காலம்ஓர் புறத்தளியில், 28
நீசடச்சுக் காரர் நிட்டூரம் போனதன்பின்,
ஆயிரத் தெழுநூற்றோ டெண்பத்தெட் டளவினிலே,
தாயிந்த நாகம்மாள் தனக்கோர் சிறுகோவில்
மீண்டும் எழுந்ததவள் மெய்யடியார் முனைப்பாலே!
ஆண்டிங்கே அக்கிரமம் ஆயிரஞ் செய்துவந்த
போர்த்துக்கே யர்போக, போனஅவர் அடிச்சுவடு
பார்த்தூர்கள் புகுந்த பரதே சிகளான
ஒல்லாந்தர் தாமும்அந்த ஓர்கோவில் இடிக்கும்
பொல்லாங்கில் முற்படவே, புத்திசாலி யாம்அம்மன்
அடியார்கதி ரித்தம்பி அதைமாதா கோவிலாய்த்
திடமாக நம்பவைத்துத் திரும்பியவர் செல்லவைத்து
அன்னைதளி அழியாமல் அற்புதமாய்க் காத்தாராம்!
இன்னலிவை சூழ்வஇன்று மே!

இன்றும் இடர்பிறருக் கேற்படுத்தி அன்னவரைக் 29
கொன்று,தாம் வாழுங் குறிகொண்டே – குன்றப்
பிரித்தாண்டு பேதை இனங்கொன்று நாளும்
திருத்தாண் டவஞ்செய்வார் போலார் – உருக்கொண்டு
மாணிக்கப் பீடம் வசமாக்கப் போரிட்ட
வீணர் பிறரறிந்தும் வீயாமல் – பேணி,அவர்
ஒற்றுமைகொண் டுய்யவைத்த உத்தமப் புத்தபிரான்
நற்றவக்கால் பட்டநலம், நாளுமுண்டி – அற்றார்
அலந்தார் பசிதீர்க்கும் அன்னஞ் சுரக்கும்
கலமேந்திக் காத்த கருணை – நலம், தளியில்
இன்றும் தினம்அன்ன தானம் இயற்றுநலம்
என்றிந் நயினை எழிற்கருணை – ஒன்றிரண்டா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாப் பிணிகள் பொசுக்கும்! துயரேதும்
இல்லாமற் போக்கும் இரக்கமய – நல்ல
சிவைபூமி யாம்நயினைத் தெய்விகம் வீசும்
தவமூக்கும் தாய்ப்பாற் கந் தம்!

கந்தரலங் காரம்,அனு பூதி, சந்தம் 30
கதிக்குமிசைத் திருப்புகழ்ப்பா பலவும் பாடித்
தந்தஅரு ணகிரியார் ஐந்நூ றாண்டு
தமக்குமுன்வ ழங்கிட்டார் நாகம் மாட்குச்
சந்திரசே கரி,நாக பூச ணத்தி,
நீலி, துத்தி யார்,நாக பூச ணிப்பேர்!
வந்து கருஞ் செம்பாம்பு தம்மில் எம்மை
வாழவைக்கும் தேவியென்று துதிப்பார் பல்லோர்!

பல்லோர் பாடும், நல்லோர் நாடும் 31
நயினைத் தளியுள் நண்ணுகல் வெட்டு
நயந்து,ஆய் சுவாமி ஞானப்பிர காசர்
பன்னிரண் டாம்நூற் றாண்டுப் பாங்கில்
மன்னன் மகாபராக் கிரம பாகுவால்
படைக்கப் பட்ட பழங்கல் வெட்டென்றார்!
உடைத்த நிலை யுள ஒருபழஞ் சாசனம்
முத்து, பவள, செப்புத்தேர் மூன்று
கத்துங் கடலாற் கவர்ந்திடப் பட்டதை
உறுதி செய்வதை நிறுவுவர் பலரே!

பலராம் பெரியார்கள் பண்டிருந்து நயினைத் 32
தலம்நண்ணி ஏத்தித் தழைத்திட்டார்! அன்னவருள்
ஞானியர்,சித்தர்கள், நல்லறிஞர், முதல்,கிரு
பானந்தர், கீ.வா.ஜெகந்நாதன், குன்றக்
குடியார், கவியோகி சுந்தானந்தர், கோலத்
தொடர்கதை நாவல் தொல்சரிதை கள்தந்த,
மணிபல் லவமென்னும் வரலாற்று நாவலிலே
அணிநயினை யைஏத்தும் அப்பார்த்த சாரதியாம்
மணிவண்ணன் சிலராவர்! வருங்காலம் இனும்அதிகம்
அணைவார் பெரியோரிவ் வாறு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமைல் சுற்றளவுள் ஆனதாய், ஆயிரத் 33
தாறுநூ றாம்ஏக்கர் மண்ணதாய்க் – கூறுசிறு
நாகதீ வுள்பார்க்கில் நானூறின் மேற்பட்ட
வாகவுள்ள வண்ண அருள்தளிகள் – ஏகதந்தப்
பிள்ளையார் கோவில், பிடாரி உறைகோவில்
வள்ளி மணாளன் மகிழ்கோவில் – தெள்ளிய நீர்க்
காட்டுக்கந் தன்கோவில், காளிஅம் மன்கோவில்,
ஆட்டுவிழு தால்வீர பத்திரன் – கோட்டம்
மலையிலைய னார்தளி மற்றோர் ஐயனார்
குலவுதளி, வேள்விபொங்கல் கொள்ளும் – தலமாம்
வெளிநாகம் மாள்கோவில், ஒவ்வொரு வீட்டின்
வளவிலும் ஒவ்வொன்றூர்க் கொன்றாய் – உளவாம்
வயிரவர் கோவில்கள்! மாதாநா கம்மாள்
அயலெல்லாம் சுற்றங்கொண் டாள்!

கொண்டுள்ளாள் நாட்டுக்கு நாடோர் நாமம் 34
குண்டலினி சத்தியெனும் நாக அன்னை!
மண்டுபுகழ் மதுரையிலே மீனாட் சித்தாய்!
வங்காளத் தில்காளி! பகவ தித்தாய்
அண்டைமலை யாளத்தில்! காச்மீ ரத்தில்
அம்பாள்! கா மாட்சிஅக் காஞ்சியில்,சா
முண்டி மை சூரில்! விசாலாட்சி காசி!
முதிர்தில்லை தனில்காளி நாகம் மாளே!

நாகம்மாள் அருள்மழை நனைந்தே பலரும் 35
பாகெனத் தித்திக்கும் பனுவல்கள், தந்தனர்!
அமர சிங்கப் புலவர், அதிகங்
கமழ்புகழ் சு.ஐயாத்துரைப் புலவர்
இயற்றிய ஊஞ்சல் நயமிகு பாக்கள்
இப்புல வர்ஐ யாத்துரை யாத்துள
கப்பற் பாட்டு, கந்த வனம்தரு
நயினைப் பத்து, முத்துக் குமாரரின்
நயினா தீவு நாகேஸ்வரி பதிகம்,
வேலணைத் தம்பு வாத்தியார் பாடிய
நூல்நயி னைத்திரு விரட்டை மணிமாலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரகவி க.நாக மணிப்புல வர்மணி
தருநூல் நயினை மான்மியம், நயினை
நீரோட்ட யமக அந்தாதி என்பவை
நயினைக. இராமச் சந்திரா நல்கிய
நாகபூ சணிஅம்மை நவராத்ரி தோத்திரம்,
ஆசிரி யர்ப.கு. சரவண பவன் ஆக்கம்
தேசுந யினைநா காம்பிகை பதிகம்,
நயினை இராமுப் பிள்ளை பாடிய
நயினை நாக பூசணி ஓலக்கக்
காட்சியும், மாட்சியும் கவிதை நூலும்,
நயினைப் பிள்ளைத் தமிழும், கவிஞர்
நயினை நா.க. சண்முக நாத
பிள்ளையின் அம்பாள் அரிச்சுவ டிமாலை,
துள்ளிசை அம்பாள் சுடர்க்கீர்த் தனங்கள்
நயினை நாக பூசணி வரலாறு
இயம்பும் பெருநூல் , நயினைநா காம்பிகை
பதிகம் முதற்பல பனுவல்கள் பெற்று
அதிசயம், அற்புதம் ஆயிரம் புரிபவள்
மணிபல் லவத்தின் அணிநா கம்மாளே!

நாகம்மாள் பேரருளை நயந்தேத்திப் பாடியவர் 36
நாகதீ வின்நல்லோர் மட்டுமல்லர்! சென்றங்கே
அன்னை அருள்பெற்ற ஆனந்தச் சிலிர்ப்பினிலே
இன்னமுதப் பாக்கள் ஏராளம் பேரிசைத்தார்!
கவியோகி சுத்தா னந்தபா ரதி,மதுர
கவிநாக ராசன், அரியாலை ஊரார் வே
ஐயாத் துரை,வித்வான் நயினைக்குமா ரசாமி
துய்யார் வரிசையிலே தொடர்ந்தும் பார்த்திடுவோமேல்
செல்வநா யகம்,நயினைச் செல்லையா வுடன்ஞா.ம.
செல்வரா சா,பண்டி தர்கந்த சாமி
சைவப் புலவரான நா.விஸ்வ லிங்கம்
தெய்வக் குரற்பித்துக் குளிமுருக தாஸ்சுவாமி
வித்துவான் க.காமாட்சி சுந்தரம், கலாநிதியாம்
மெத்துபுகழ்க் காரை சுந்தரம் பிள்ளை,பொன்னர்,
இராமச் சந்திரன்,அண்டி யார்,தரும லிங்கமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரத் தினம்,குரும்பை இரசிகமணி கனகசெந்தி
நாதன்அன்றிக் கீ.வா.ஜெகந்நாதன் போன்றார்
பாதிகழும் நெஞ்சப் பக்தர்கள் வந்தேத்திப்
பகவதியின் இன்னருளால் பரவச மானவராய்
அகங்கனிந்து தனிப்பாக்கள் அள்ளூறப் பாடியுளார்.
பாடிட்டார், பாடுகிறார் பாம்பிறைவி உருவேற்றப்
பாடுவார் இன்னும் பலர்!

பலர்பாரே போற்றும் பே ராசிரியர் பைம்பா 37
வலரை வழங்கினாள்! இன்பக் – கலைவல்ல
வித்தகர், வேதஞான மேதைகளை, பத்திசாலும்
முத்தர் விஞ் ஞானிகளை, சோதிடரை – முத்தாம்
மருத்துவரை, வர்த்தக மன்னர்களைத் தந்தாள்
உருத்தலைகள் 'ஓம்'என்றே ஓத – இரத்தினங்கள்
விட்டொளிரும் மண்ணினாள்! வீராசா மிப்பெயர்கொள்
செட்டி, தனக்காகச் சேர்வித்த – பட்டர்களால்
நாகம்மாள் தன்னோடு, நாட்டுக்கோ வில்யாவும்
ஆகமப் பூசை அடைவித்தாள் – வேகுசுடர்
ஞாயிற்றை ஏத்துவதால் ஞாயிற் றினம்போன்று,
சீயத்தை ஏத்துவதாற் சீயவினம் – தேயும்
நிலவேத்தி வந்து நிலவினம் ஆனார்,
கொலைக்கருடன் ஏத்தியே அந்தக் – குலமானோர்
போல்நாக மேத்தியோர்பூ ண்டார்நா கர்நாமம்!
நால்திசை நாடெங்கும் நண்ணுகிறார்! – சால்சீனா,
இந்தியா, மேற்கா பிரிக்காவோ டித்தாலி
அந்தக் கிரேக்கம், அகல்பூமிப் – பந்துப்
பலநாட்டார் கொண்டாடிப் பாராட் டிடினும்
தலைத்தெய்வ மாயீழத் தாரோ – அலைசூழ்
மணிபல்ல வம்தோன்றி வாழ்நாகி தன்னைப்
பணிகின்றோம்! பக்தர் நயினை – அணிசெய்
நயினாதீ வுச்சாமி, நாடுபல நண்ணி
இயற்றிக் குடமுழுக் கேற்றமுற்ற – கைலாய
நாதக் குருக்களினை, ஞானநூல் பற்பலவும்,
ஓதுமாத்ம ஜோதி உயரிதழும் – சாதனையாய்த்
தந்தராமச் சந்திரா, சாமிநா தக்குருக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா கல்வி,கலை ஊர்த்தொண்டர் – அன்னார்
வழிசெல்லும் சீடர் மணிகளை நல்கிப்
பழையா ளிருந்தாளூர்ப் பால்!

பால்பருக்கிப் பாலகர்க்காம் நேர்த்தி நல்க, 38
பாலகர்தம் சடையிறக்கும் நேர்த்தி செய்ய,
தோல்வருத்தம், சொறிநீங்க நேர்த்தி வைக்க,
சுணங்காமல் மணம்பொருந்த நேர்த்திவைக்க,
சால்வயதுச் சேய்பிறக்க நேர்த்தி வைக்க,
சத்துரு, நோய், வறுமை,சிறை நீங்கவேண்ட
நூல்கட்ட, அருட்பார்வை குருபால் எய்த
நூறுபட கோடும்தினம் நயினை நோக்கி!

நோக்கிப் புகழ்,சொத்து, நீக்கி நீதி, 39
எங்கள் தன்னலந் தூண்டத் தூண்ட,
எங்கள் பழிமலை ஓங்க, ஓங்க,
கடவுள் நினைவும், கடவுள் பயமும்
அறத்தில் விருப்பும், மறத்தில் வெறுப்பும்,
குன்றக் குன்றக் குன்றிய நாங்கள்,
முகத்துக் கஞ்சிநம் மூர்க்க ரதர்மங்கள்
சகித்து நடந்த சாவிகள் நாங்கள்
தண்டனைக் குரிய மிண்டர்க ளானோம்!
பேய்ப்பகை வர்க்கிது வாய்ப்பாய்ப் போனது!
ஒடுக்க, ஒடுக்க ஒடுங்கித் தவித்தோம்!
அடக்க அடக்க அடங்கிச் சிறுத்தோம்!
கடவுளை முற்றாய்க் கைதொழல் விட்டதால்
கொடுங்குண மெல்லாம் குடிகொள எம்மிடம்
பாழ்வினை எங்களை வீழ்வினுள் தள்ளிற்று!
ஆயினும் எங்களைத் தாயிவள் காத்தாள்!
சிதறிப்பறந்தோம் தேசங்கள் தோறும்!
பதறிப் பரவினோம் பாம்பிறைத் தாயை!
கனடாத் தமிழர் கதறல் கேட்டுக்
கனடாக் கோவில் கடுகி அமர்ந்தாள்!
'வார்டன், எல்ஸ்மயர்' தேடி அமர்ந்தாள்!
லண்டன் தமிழர் ஏங்கி அழைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாள்! அங்குங் கணத்தில் பறந்தாள்!
'என்வீல்ட்' என்னும் எழில்நகர் ஆர்ந்தாள்!
தன்சேய்ப் பக்தரைத் தாயெனக் காக்கிறாள்!
ஜேர்மனித் தமிழரின் "எங்களைக் காக்க
யார் இனி அம்மா?" அழுகுரல் கேட்டுப்
'பொற்சைம்' நகரில் போய்க் கோவில் கொண்டு
அற்புத மாக அவர்களைக் காக்கிறாள்!
மேலும் பலநாடு வெந்தழை தமிழர்
பாலும் பறந்து பரிந்தமர்ந் தருளிக்
கண்ணீர் நீக்கி எண்ணிக் காப்பளே!
கருதிநாம் தொழத்தொழ அருகிடும் பாவமே!

பாவங்கள் நீக்கியெமைப் பண்பாள ராக்கிப்பின்
தேவியுன் திருவடியே சேர்க்கும் விடிவென்றே
ஒருமனமாய் நம்பி உத்தமராய் நடந்து கொண்டு
பரம்பரைகள் தந்தின்று பறிபோன வற்றையெலாம்
மீட்பதன்றி நோக்கம் வேறெதுவு மேகொள்ளோம்!
கேட்கோம் பிச்சையெதும் கீழ்த்தனத்து மானிடர்பால்!
நாகம்மா! உலகத்து நாடெல்லாம் இருந்தபடி
சோகமுறும் தமிழர்உன் தொல்லடியில் சூளுரைத்தோம்!
நீயே தீ வினைதீர்த்தெம் நீசக் குணம் நீற்றித்
தாயே நிரந்தரமாய்த் தந்தருள்வாய் நல்வாழ்வை!
முத்தாமோர் தலைமுறையை மொத்தமாய் இழந்து
எய்த்தோரா னோமேவன் னி!

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் பற்றி...

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் ஓர் அருட்கவி ஆவார். அவர் ஈழம், தமிழகம், இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளிலுள்ள பல்வேறு ஆலயங்களின்மீது நூற்றுக்கும் மேற்பட்ட திருப்பாமாலைகள் பாடியுள்ளார். புராணம், திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ், தூது, துதி, அந்தாதி, பதிகம், சிந்து, வெண்பா, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை என ஐம்பதுக்கும் மேற்பட்ட பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கையாண்டு பாடிய சமய இலக்கியங்கள் சைவத்தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பனவாகும். ஈழத்துச் சைவப் பழம்பதிகளில் இணுவில் பதியும் ஒன்றாகும். இளமைக்காலம் முதலாக இணுவில் முருகன் பதியில் ஈடுபாடுகொண்டு பாவியற்றும் ஆளுமையை வளர்த்துக்கொண்ட புலவர் பஞ்சாட்சரம் அவர்களின் பழுத்த பக்தி அனுபவம் இந்நூலிலும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இவற்றுடன், தமிழ் இலக்கியத்திற்குக் கவிதை, குறும்பாக்கள், காவியம், சிறுகதை, சமூக நாவல்கள், குட்டிக்கதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர் நாடகங்கள், பா நாடகங்கள், உருவகக் கதைகள் என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுள்ளார். இவரது இலக்கிய ஆளுமையின் பயனாகச் சாகித்திய மண்டலப்பரிசு, இலங்கை கலை இலக்கியப் பேரவையின் பரிசு என்பன இவருக்குக் கிடைத்துள்ளமையும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கதாகும்.

**பேராசிரியர் இ. பாலசுந்தரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org